# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No. 187/2019 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா– 05 ( PW– 05 ) |
| பெயர் | :– | பார்தீப ராஜ் |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | வெங்கடாசலம் |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.

சான்றாளரின் கையொப்பம்

எதிரிகள் தோன்றினார்கள். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை:-**

நான் மேட்டூர் R.S பகுதியில் வசிக்கிறேன். முத்தநாயகன்பட்டி ஊரில் உள்ள Granite தொழிற்சாலையில் மேலாளராக பணிபுரிகிறேன். இறந்து -போன அமிர்தராஜ் என் உடன்பிறந்த சகோதரர். நீதிமன்றத்தில் தோன்றி யுள்ள எதிரிகளில் 01-ஆம் எதிரி ஸ்டாலின் ஜெயக்குமாரை தெரியும். அவருடைய தகப்பனார் RHMP மருத்துவர். எங்கள் பகுதியில் மருத்துவமனை வைத்திருந்தார். அப்போது இருந்தே 01-ஆம் எதிரியை தெரியும். 01-ஆம் எதிரி என்ன தொழில் செய்கிறார் என்று எனக்குத் தெரியாது.

19.12.2017-ஆம் தேதியன்று மாலை 03.00 மணியளவில் நான் என்னுடைய வேலை நிமிர்த்தமாக கிருஷ்ணகிரி ஊரில் இருந்தேன். என் மனைவி என் கைபேசியில் அழைத்து உங்கள் தம்பி அமிர்தராஜை வெட்டி கொன்றுவிட்டார்கள் என்று சொன்னார். நான் என்னுடைய நண்பர் பாஸ்கரை கைபேசியில் அழைத்து என் மனைவி சொன்ன தகவலை சொல்லி உண்மையா என்று கேட்டேன். அவரும் உண்மைதான் என்று சொன்னார். எந்த இடம் என்ற தகவலையும் பாஸ்கர் சொன்னார். நான் மகிழுந்தில் புறப்பட்டு அந்த இடத்திற்கு சென்றேன். மேட்டூரில் மாதையன் குட்டைக்கு அடுத்த காவேரி Cross என்ற இடத்தில் உள்ள இந்துஸ்தான் தாபா என்ற உணவகம் இருந்த இடத்திற்கு சென்றேன். அமிர்தராஜ் அந்த உணவகத்தின் சமையல் அறைக்கு வெளியே முகமும் வயிறும் கீழே இருக்கும்படி வெட்டுபட்டு இறந்து கிடந்தார். நான் அங்கு சென்றபோது காவல் துறையினர் அங்கு இருந்தனர். என்ன நடந்தது என்று நான் அங்கு இருந்தவர்களிடம் கேட்டதற்கு ஸ்டாலின் ஆட்களை வைத்து கொன்று

விட்டார் என்று சொன்னார்கள். இடப்பிரச்சனை என்று சொன்னார்கள். நான் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். சலடத்தை அங்கு கொண்டு வந்தார்கள். இதுச் சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரிக்க வில்லை. உணவகம் இருக்கும் இடத்தில் விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

என் தகப்பனாரின் சகோதரி பாக்கியம் என்றால் சரிதான். பாக்கியத்தின் கணவர் கோவிந்தன் என்றால் சரிதான். இருவருக்கும் வினோத்குமார் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். பழனிசாமி மகன் செல்வகணபதி எனக்கு மாப்பிள்ளை உறவுமுறை வேண்டும். வினோத்குமாரும் செல்வகணபதியும் எப்போது சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்று தெரியாது. நான் தற்போது முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான் புலனாய்வின்போது சொன்னேன் என்றால் சரிதான்.

Sd/-V. Pugazhenthi,
Additional District & Session Judge,
Salem.